# செய்தி

வடக்கு மாகாண பொதுச்சேவையின் இணைந்த சாரதிகள் சேவையின் மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் **2024.05.18**ம் திகதி **சனிக்கிழமை** நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரியுடனோ அல்லது 021-2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகள் தமக்குரிய அனுமதி அட்டை மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விதித்துரைக்கப்பட்ட ஆவணம் ஆகியவற்றுடன் சமூகமளிக்குமிடத்து மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதை இத்தால் அறியத்தரப்படுகிறது.

**சி.திருவாகரன்,**
செயலாளர்.